| ப.எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் – முதல் தாள்

(செய்யுள், உரைநடை)

காலம் : $2^1/_2$ மணி] [மதிப்பெண்கள்: 100

**அறிவுரை** : அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

இவ்வினாத்தாள் **ஐந்து பிரிவுகளை** கொண்டது

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.

## பிரிவு – I
## (மதிப்பெண்கள் : 20)
### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.** $6 \times 1 = 6$

(1) செல்வத்தை நிலையாகக் கட்டும் கயிறாக வள்ளுவர் கூறுவது:
(அ) ஒழுக்கம் (ஆ) காலமறிதல்
(இ) அடக்கமுடைமை (ஈ) பெரியோரைத் துணைக்கோடல்

(2) கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள்:
(அ) முத்து (ஆ) பவளம் (இ) மாணிக்கம் (ஈ) மரகதம்

(3) கம்பரைப் புரந்தவர்
(அ) ஔவையார் (ஆ) புகழேந்தி (இ) சடையப்ப வள்ளல் (ஈ) சீதக்காதி

(4) பெண் அடிமையானதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ____________ இல்லாமை:
(அ) வாக்குரிமை (ஆ) பேச்சுரிமை (இ) சொத்துரிமை (ஈ) எழுத்துரிமை

(5) கீழ்க்காண்பனவற்றுள் காந்தியடிகளின் மனங்கவர்ந்த குஜராத்திப் பாடலின் கருத்து:
(அ) இன்னாசெய்யாமை (ஆ) இன்சொல் கூறுதல் (இ) எளிமை (ஈ) சிக்கனம்

(6) நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை __________ .
(அ) ஓவியக்கலை (ஆ) இசைக்கலை (இ) பேச்சுக்கலை (ஈ) நடனக்கலை

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** $6 \times 1 = 6$

(7) தம்மை அடைக்கலமாகக் கொண்டவரின் துயரை நீங்குவதே __________ என நற்றிணை குறிப்பிடுகிறது.

(8) பெரியபுராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் __________ .

(9) "திகழ்பா ஒரு நான்குஞ் செய்யுள் வரம்பாகப்
புகழ்பா வினங்கள் மடைப் போக்கா"
- இப்பாடலடிகளில் செய்யுளின் வரம்புகளாகக் குறிப்பிடப்படுபவை __________ .

[திருப்புக

(10) மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் __________ பேராசிரியாகப் பணியாற்றினார்.

(11) இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு __________ இருக்கும்.

(12) தமிழர்கள் நிலத்தை __________ வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.

**பகுதி - 3**

**பொருத்துக.** **4 × 1 = 4**

(13) தேவாரம் - திருமூலர்

(14) சீறாப்புராணம் - நல்லந்துவனார்

(15) கலித்தொகை - சாலை.இளந்திரையன்

(16) பூத்தது மானுடம் - திருநாவுக்கரசு

**பகுதி - 4**

**தொடருக்கு ஏற்ற வினாத்தொடர் அமைக்க.** **4 × 1 = 4**

(17) இலக்கணம் வகுத்த பின்பே இலக்கியங்கள் தோன்றின.

(18) இராமலிங்கர் தமிழ்மொழியே இறவாத நிலை தரும் என்று கூறினார்.

(19) தமிழர்கள் அரபு நாட்டுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

(20) தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.

**பிரிவு – II**

**(மதிப்பெண்கள் : 20)**

**பகுதி - 1**

**கீழுள்ள வினாக்களுள் ஐந்தனுக்கு, மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** **5 × 2 = 10**

(21) இறைப்பற்று உடையவர்களின் செயல் எவ்வாறு இருக்க வேண்டுமென மாணிக்கவாசகர் கூறுகிறார்?

(22) குகன், இராமன் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்திய செயல்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.

(23) "ஈறில்பெருந் தண்ணீர்ப் பந்தரில் நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணணம்என்கொல்."- யார். யாரிடம் வினவினார்?

(24) கலம்பகம் – குறிப்பெழுதுக.

(25) பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

(26) போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

(27) பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?

**பகுதி - 2**

**கீழுள்ள வினாக்களுள் ஐந்தனுக்கு, மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** **5 × 2 = 10**

(28) பண்பட்ட உயர்ந்த சிந்தனை தமிழ்மொழியில் அமைந்திருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டினைத் தருக.

(29) விளக்கப்படம் – குறிப்பெழுதுக.

(30) தமிழகம் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது என்பதற்கு ஒரு சான்று தருக.

(31) உலகம் என்னும் சொல்லின் பெயர்க்காரணம் கூறுக.

(32) பகட்டான வாழ்வை விரும்பாதவர் காந்தியடிகள் – இக்கூற்றை விளக்குக. நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள நிகழ்வைக் குறிப்பிடுக.



www.TeacherTN.com

(33) மக்கள் சமுதாயம் எவ்வாறு வாழவேண்டும் என்று இராமலிங்கர் விரும்பினார்?

(34) தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?

## பிரிவு – III
## (மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

**கீழுள்ள வினாக்களுள் மூன்றனுக்கு, ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 × 4 = 12**

(35) அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றாகும் – இக்கருத்தைச் சிலப்பதிகாரம் எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

(36) சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?

(37) புலியின் கொடுஞ்செயல்களாக உமறுப்புலவர் கூறுவன யாவை?

(38) இன்று இளைப்பாறுவோம் என்று இருக்கக்கூடாது, ஏன்?

(39) சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் மூன்றனுக்கு, ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 × 4 = 12**

(40) கைம்பெண் மணத்தை ஆதரித்தவர் பெரியார் – இக்கூற்றைச் சான்று காட்டி நிறுவுக.

(41) மேடைப்பேச்சில் மொழி எவ்வாறு அமைதல் வேண்டும்?

(42) இந்தியாவில் மனித உரிமைக்காக முதலில் நடைபெற்ற போராட்டங்களை எழுதுக.

(43) தமிழர் இசைக்கலையில் மேம்பட்டிருந்தனர் என்பதை நிறுவுக.

(44) காந்தியடிகள், தம் வாழ்வில் வாய்மையைக் கடைப்பிடிக்க அடிப்படையாக அமைந்த நிகழ்ச்சியை விளக்குக.

## பிரிவு – IV
## (மதிப்பெண்கள் : 10)

(45) **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** **5**

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப்படுந் தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

(ii) முத்தமிழ் – இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.

(iii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

(iv) உவந்துரைக்கும் - பிரித்தெழுதுக.

(v) விளம்பக்கேள் – பொருள் கூறுக.



www.TeacherTN.com

(46) ***கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.*** **5**

வினையே ஆடவர்க்குயிர் என்கிறது குறுந்தொகை. முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்தவேண்டும் எனவும், பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடாது எனவும் கூறி வந்தனர். இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில் இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பத்தைச் சிறப்பாக நடத்த இயலும்.

பள்ளிக்கல்வியை முடித்த ஒருவர், அதற்குமேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு வேலைவாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெறவேண்டும். தற்போது மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது.

(i) ஆடவர்க்குயிராகக் குறுந்தொகை எதைக் குறிப்பிடுகிறது?

(ii) முந்நீர் – இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.

(iii) மகடூஉ – இச்சொல்லின் பொருள் யாது?

(iv) தற்போது பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படையாக அமையும் கல்வி எது?

(v) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.

## ***பிரிவு* – V**

**(*மதிப்பெண்கள் :* 26)**

### ***பகுதி* - 1**

***கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.*** **2 × 8 = 16**

(47) *(அ)* சிலப்பதிகார வழக்குரை காதையில், பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியின் இறப்பு, இளங்கோவடிகளால் எவ்வாறு நியாயப்படுத்தப்படுகிறது?

(அல்லது)

*(ஆ)* பரியாரைத் துணைக்கோடலினால் விளையும் நன்மைகள் குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

(48) *(அ)* தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என்னும் கூற்றை மெய்பிக்க ஐந்து சான்றுகள் தருக.

(அல்லது)

*(ஆ)* மேனிலைக்கல்வி, பலதுறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற அடிப்படையாக அமைவதை உரிய எடுத்துக்காட்டுகள் தந்து நிறுவுக.

### ***பகுதி* - 2**

(49) ***செய்யுள் வடிவில் விடையளிக்க.*** **2 + 2 + 6 = 10**

*(அ)* ‘செய்க பொருளை‘ - எனத் தொடங்கும் குறள்.

*(ஆ)* ‘செயல்’ – என முடியும் குறள்.

*(இ)* ‘வாயிற் கடைமணி _______ புகாரென்பதியே’ - சிலப்பதிகாரப் பாடலடிகள்.



www.TeacherTN.com